இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 77 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 09 – சனிக்கிழமை 26 அக்டோபர் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 77 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 09 - Saturday 26 October 2024 - Dak 12 Pages ₹ 5.00

# களஆய்வு தொடங்கும்.. சாதனைத் திட்டங்கள் தொடரும்..



நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் அன்பு உடன்பிறப்புகளுக்கு 'உங்களில் ஒருவன்' எழுதும் மடல்.

'மக்களிடம் செல்... அவர்களுடன் வாழ்...' என்று நமக்கு பொது வாழ்க்கைக்கான பாடம் கற்றுத் தந்தவர் பேரறிஞர் அண்ணா. அந்த அண்ணாவின் அன்புத் தம்பியாக, அவர் உருவாக்கிய 'திராவிட முன்னேற்றக் கழகம்' எனும் அரசியல் பேரியக்கத்தை அரை நூற்றாண்டு காலத்திற்கு வழிநடத்திய முத்தமிழறிஞர் கலைஞரும் அதைத்தான் நமக்கு கற்றுத் தந்திருக்கிறார்.

கழகம் ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் எப்போதும் மக்களிடம் சென்று, மக்களுடன் நிற்கின்ற இயக்கமாகும்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்கப் பயணம் மேற்கொள்வதற்கு முன்பாகவே நமது 'திராவிட மாடல்' அரசின் அமைச்சர்களிடம் அவரவர் துறைசார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டும், அவரவர் மாவட்டங்களில் உள்ள பணிகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டும் அறிக்கை தயாரித்து வைக்குமாறு கேட்டுக்கொண்டேன். அதுபோலவே, அமைச்சர்கள் பலரும் அறிக்கைகளை அளித்திருந்தனர். அதனை நானும் துணை முதலமைச்சரும் மூத்த அமைச்சர்களும் பார்வையிட்டு, பத்தாண்டுகால அ.தி.மு.க ஆட்சியில் முடங்கிப் போயிருந்த தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பினை மேம்படுத்த மாவட்ட வாரியான ஆய்வுகளுக்குத் திட்டமிட்ட நிலையில், பருவ மழைக்காலம் தொடங்கிவிட்டது.

இந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழையின் தொடக்கத்திலேயே சென்னை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கனமாகப் பெய்த நிலையில், முதலமைச்சரான உங்களில் ஒருவனான நானும், துணை முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களும் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும், மேயர் - சேர்மன் - உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் அரசு நிர்வாகத்தினரும் இரவு பகல் பாராமல் களத்தில் நின்று மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல் பணியாற்றியதை ஊடகங்களும், திராவிட மாடல் அரசின் பணியை நேரில் பார்த்த பொதுமக்களும் பாராட்டுகின்றனர்.

## உங்களில் ஒருவன்

பருவ மழை தொடர்கின்ற நிலையில், மழை நீர் தேங்குகிற இடங்களில் உடனே அவற்றை வடியச் செய்வது, போக்குவரத்துக்கும் அத்தியாவசியத் தேவைக்கும் பாதிப்பின்றி உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்வது உள்ளிட்ட





**மழைக்கால நிவாரணப் பணிகள் திறம்பட நடைபெற்று வரும் நிலையில், இதனைப் பொறுக்க முடியாமலும், தாங்கள் அரசியல் செய்வதற்கு எதுவும் கிடைக்காததாலும் எதிர்வரிசையிலே இருப்பவர்கள், அதிலும் தங்களுடைய பத்தாண்டுகால மோசமான ஆட்சிக்காலத்தில், கடைசி நான்கு ஆண்டுகளில் படுமோசமான நிர்வாகம் நடத்தியவர்கள், மக்கள் மீதான அக்கறையுடன் செயல்படும் திராவிட மாடல் அரசு மீது அடிப்படையில்லாத அவதூறுகளைப் பரப்ப முனைந்து, அதிலும் முனை முறிந்து போயிருக்கிறார்கள்.**

பொதுவாழ்வில் விமர்சனங்கள் சர்வ சாதாரணம்தான் என்பதால் எதிர்த்தரப்பின் ஆதாரமற்ற விமர்சனங்களைக் கடந்து, திராவிட மாடல் அரசு தனது மக்கள் நலப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் அக்டோபர் 22-ஆம் தேதியன்று நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்காக சேலத்திற்குச் சென்றேன். அமைச்சரவையில் புதிதாக இடம்பெற்றிருப்பவரும் மாவட்டக் கழகச் செயலாளருமான இராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினரும் மேற்கு மாவட்டச் செயலாளருமான திரு. செல்வகணபதி, கிழக்கு மாவட்டச் செயலாளர் திரு. சிவலிங்கம் உள்ளிட்ட கழக மூத்த முன்னோடிகள் வரவேற்றனர். அங்கிருந்து நாமக்கல் நோக்கிப் பயணித்தேன்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி., சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். மாநிலங்களவை உறுப்பினராக இருப்பவர் தனக்குரிய தொகுதி மேம்பாட்டு நிதியினை மாநிலம் முழுவதும் பயன்படுத்தும் வாய்ப்பு கொண்டவர். எனினும், அவருக்குத் தமிழ்நாடு என்றால் நாமக்கல்தான். மண்ணின் மைந்தர் என்ற முறையில் எப்போது

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## கழகத் தலைவர் தலைமையில்

# தொகுதிப் பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம் !

### தலைமைக் கழக அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், 2026 - சட்டமன்றத் தேர்தல் பணிகளை மேற்கொள்ளும் வகையில் நியமனம் செய்யப்பட்டுள்ள "**சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம்**" வருகிற 28.10.2024 (திங்கட்கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், "கலைஞர் அரங்கத்தில்" நடைபெறும்.

இக்கூட்டத்தில் தொகுதிப் பார்வையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.10.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## ஒரு வாரத்தில் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

# எடப்பாடி பழனிசாமி மீது ரூ.1 கோடி மான நஷ்ட வழக்கு !

### அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தொடர்ந்தார்!

சென்னை, அக்,26-

ஒரு கோடி ரூபாய் மான நஷ்ட ஈடு கோரி தி.மு.க. தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், ஒரு வாரத்தில் பதிலளிக்கும்படி எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமிக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. போதைப் பொருள் கடத்தல் வழக்கில் ஜாபர் சாதிக்கை டெல்லி போலீசார் கடந்த மார்ச் மாதம் கைது செய்தனர்.

இந்நிலையில் தி.மு.க.வுடன் ஜாபர் சாதிக்கை தொடர்புபடுத்தி அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் பதிவிட்டு வருவதால் ஒரு கோடி ரூபாய் மான நஷ்ட ஈடு வழங்க உத்தரவிடக் கோரி தி.மு.க. தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இதுகுறித்து தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தாக்கல் செய்த வழக்கில், போதைப்பொருள் கடத்தல் வழக்கில் ஜாபர் சாதிக் கைது செய்யப்பட்ட பின், அவர் தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டதாகவும், தி.மு.க.வுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் எடப்பாடி பழனிச்சாமி பதிவிட்ட கருத்துக்களை எக்ஸ் சமூக வலைதளத்தில் இருந்து நீக்கவும், இதுதொடர்பாக மேலும் அவதூறு கருத்துக்களை அவர் பதிவு செய்ய தடை விதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி டிக்காராமன், ஒரு வாரத்தில் பதில் மனு தாக்கல் செய்யும்படி எடப்பாடி பழனிச்சாமிக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

## 'திராவிட மாடல்' அரசின் திட்டங்களின் நிலைகுறித்து

# கோவையில் நவ. 5, 6 தேதிகளில் கள ஆய்வு !

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு !

சென்னை, அக்.26-

திராவிட மாடல் அரசின் திட்டங்களின் நிலைகுறித்து கோவையில் வருகிற நவம்பர் 5 மற்றும் 6 ஆகிய இரு தேதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வு நடத்துகிறார். அதைத் தொடர்ந்து மற்ற மாவட்டங்களில் கள ஆய்வை நடத்தப் போவதாக அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பக்கத்தில் கீழ்க்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

**நமது திராவிட மாடலின் திறனைப் பாராட்டும் விதமாக நாமக்கல் மாவட்ட மக்கள் அளித்த வரவேற்பில் உள்ளம் நெகிழ்ந்தேன்!**

**நமது அரசு நிறைவேற்றி வரும் திட்டங்களின் நிலை குறித்து மாவட்ட வாரியான கள ஆய்வை நவம்பர் 5, 6 தேதிகளில் கோவையில் இருந்து தொடங்குகிறேன்.**

**கள ஆய்வுகள் நிறைவுற்றதும் கழகப் பணிகளை ஆய்வு செய்யவுள்ளேன்...**

இவ்வாறு பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கீழ்க்கண்ட வாசகங்களையும் பதிவிட்டுள்ளார்.

**அமெரிக்கப் பயணத்திற்கு முன்பாகவே நான் கேட்டுக் கொண்டபடி, அமைச்சர்கள் பலரும், அவரவர் துறை சார்ந்த மற்றும் மாவட்டங்களில் உள்ள பணிகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை அளித்திருந்தனர்.**

**அதனை நானும் துணை முதலமைச்சரும் மூத்த அமைச்சர்களும் பார்வையிட்டு, மாவட்ட வாரியான ஆய்வுகளுக்குத் திட்டமிட்ட நிலையில், பருவ மழைக்காலம் தொடங்கிவிட்டது.**

**இந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழையின் தொடக்கத்திலேயே சென்னை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கனமாகப் பெய்தது.**

**நானும், துணை முதலமைச்சர் உள்ளிட்ட அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் அரசு நிர்வாகத்தினரும் இரவு பகல் பாராமல் களத்தில் நின்று பணியாற்றியதை ஊடகங்களும், பொதுமக்களும் பாராட்டுகின்றனர்.**

**எதிர்வரிசையிலே இருப்பவர்கள், திராவிட மாடல் அரசு மீது அடிப்படையில்லாத அவதூறுகளைப் பரப்ப முனைந்து, அதிலும் முனை முறிந்து போயிருக்கிறார்கள்.**

**அக்டோபர் 22ஆம் தேதியன்று நாமக்கல் மாவட்டத்தில் 19.50 கோடி ரூபாயில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தைத் திறந்து வைத்தேன்.**

**16 ஆயிரத்து 31 பயனாளிகளுக்கு 146 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினேன்.**

**திராவிட மாடல் ஆட்சியில் அறிவிக்கப்படும் திட்டங்களின் செயல்பாடு குறித்து நவம்பர் 5, 6 தேதிகளில் கோவைக்குச் சென்று கள ஆய்வினைத் தொடங்க இருக்கிறேன். மற்ற மாவட்டங்களிலும் தொடரவிருக்கிறேன்.**

**கள ஆய்வுப் பணிகளை அந்தந்த மாவட்டங்களில் நிறைவு செய்த பிறகு, கழகப் பணிகளையும் ஆய்வு செய்வேன். கண்மணிகளாம் உடன்பிறப்புகளையும் நேரில் கண்டு நெஞ்சம் மகிழ்வேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைப்பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# ஜார்க்கண்ட்: முதற்கட்டத் தேர்தல் வேட்பு மனு தாக்கல் நிறைவடைந்தது !

புதுடெல்லி, அக்.26-

ஜார்க்கண்ட் சட்டமன்றத் தேர்தலையொட்டி, அம்மாநில முதல்வர் ஹேமந்த் சோரன் மற்றும் அவரது மனைவி கல்பனா சோரன் ஆகியோர் வேட்பு மனு தாக்கல் செய்தனர்

ஜார்க்கண்டில் மொத்தம் உள்ள 81 தொகுதிகளுக்கு இரு கட்டங்களாக வரும் நவம்பர் 13 மற்றும் 20 ஆகிய தேதிகளில் தேர்தல் நடைபெறுகிறது. 43 தொகுதிகளில் கடந்த 18 ஆம் தேதி தொடங்கிய முதற்கட்டத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்றுடன் நிறைவடைந்தது.

இதையொட்டி அம்மாநில முதல்வரும், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவருமான ஹேமந்த் சோரன் மற்றும் அவரது மனைவி கல்பனா சோரன் ஆகியோர் நேற்று முன்தினம் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

பர்யாஹட் தொகுதியில் ஹேமந்த் சோரனும், கண்டே தொகுதியில் அவரது மனைவி கல்பனா சோரனும் போட்டியிடுகின்றனர். தும்கா தொகுதியில் சோரனின் சகோதரர் பசந்த் சோரன் மீண்டும் போட்டியிடுகிறார்.